PW 8 - திரு.கார்த்திகேயன்

**சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப் பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

1) அரசு தரப்பு சாட்சி 1 சங்கீதா எழுத்து மூலமான வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை என்றால் வாய் மொழி வாக்குமூலம் கொடுத்தார். அ.சா.1 சங்கீதா கம்பி வேலியை எத்தனை பேர் போட்டார்கள் என்று எழுத்து மூலமாக அல்லது புகார் வாக்குமூலமாகவோ என்னிடம் தெரிவித்தாரா என்றால் இல்லை. அ.சா.1 சங்கீதா 1 ஆம் எதிரி தவறான ஆபாச வார்த்தையை சொன்னது பற்றி எழுத்து மூலமாக அல்லது புகார் வாக்குமூலமாகவோ என்னிடம் தெரிவித்தாரா என்றால் என்னிடம் புலன் விசாரணை சமயத்தில் தெரிவித்தார். சம்பவம் நடக்கும் போது 1 ஆம் எதிரிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் யார் யார் நின்றிருந்தார்கள் எத்தனை பேர் நின்று இருந்தார்கள் என்றால் சம்பவ சமயத்தில் தெரியாது விசாரணைக்கு பின்னிட்டுதான் தெரியும்.

2)விசாரணையில் யார் நின்றிருந்தார்கள் என்று சொன்னார்கள் என்றால் கணவர் மகன், மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் இருந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 என்னிடம் சம்பவ சமயத்திற்கு பின்னிட்டு எதிரிகள் கொலை மிரட்டல் விடுப்பதாகவும் அதனால் பாதுகாப்பு வேண்டும் என்று புகாரில் தெரிவித்தாரா என்றால் இல்லை. சம்பவத்தில் குமரன் கார்டன் என்ற இடத்தில் பிரச்சனை ஏற்பட்டது என்றும் அ.சா.1 எதிரிக்கு பாத்தியப்பட்ட இடம் என்று புகார் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளாரா என்றால் முதல் விசாரணை அறிக்கை பதிவு செய்த காவலரிடம் அ.சா.1 தனது இடம் என்று தெரிவித்துள்ளார்.

3) அந்த இடம் எத்தனை சென்ட் உடையது என்று தெரிவித்துள்ளாரா என்றால் வழக்கிற்கு அவசியமானது அல்ல என்பதால் விசாரிக்கவில்லை. சம்வம் நடந்த போது யார்

யார் வந்தார்கள் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று அ.சா.1 புகார் வாக்குமூலத்தில் தெரிவித்தாரா என்றால் இல்லை. அ.சா.1 சம்பவ இடத்தில் யார் யார் கம்பி வேலி போடவந்தார்கள் எத்தனை நபர்கள் கம்பி வேலி போட வந்தார்கள் என்று புகாரில் தெரிவித்தாரா என்றால் இல்லை. அ.சா.1ன் புகாரானது சம்பவம் அன்றே பதிவுசெய்யப்பட்டதா என்றால் புகார் பதிவு செய்தவரை தான் கேட்க வேண்டும்.

4) அ.சா.1 ன் கணவர் தான் அ.சா.2 என்றால் சரிதான். அ.சா.2 புகார் வாக்குமூலத்தில் இடத்தை வாங்குவதற்கு முன்பே நான் அதை பற்றி சரிபார்த்தேன் என்று புகார் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளாரா என்றால் இடம் சம்மந்தமாக நான் விசாரணை மேற்கொள்ளவில்லை. புகார்தாரருகக்கு ஏற்பட்ட பிரச்சனை மற்றும் தகாத வார்த்தையில் திட்டியது மற்றும் சிறு காயம் ஏற்பட்டது மற்றும் கொலை மிரட்டல் விடுத்தது சம்மந்தமாக தான் விசாரித்தேன். சம்பவம் நடைபெறும் போது அ.சா.1 மற்றும் அ.சா.2 உடன் யார் யார் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தார்கள் என்றால் அ.சா.3 மற்றும் 4 உடன்சென்றிருந்தார்கள். அ.சா.1 முதல் அ.சா.4 வரை ஒன்றாக சென்றிருந்தார்கள் என்றால் விசாரணையின் போது ஒன்றாக இருந்ததாக சொன்னார்கள்.

5) சம்பவம் எந்த நேரத்தில் நடந்து என்றால் புகாரில் தெரிவித்த நேரத்தில் தான் நடைபெற்றது. சம்பவம் நடைபெற்றது என்பதை அ.சா.1 முதல் அ.சா.4 வரை உள்ளவர்களுக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று என்னிடம் தெரிவித்தார்கள் என்றால் புலன் விசாரணையின்போது சம்பவ இடத்தை பார்வையிட மட்டுமே அ.சா.1 முதல் 4 வரை சென்றிருந்தார்கள் தகவல் யாரும் தெரிவிக்கவில்லை. யார் எனக்கு முதலில் புகார் அளித்தார்கள் என்றால் அ.சா.1 புகார் அளித்து சிறப்பு உதவி ஆய்வாளர் இளங்கோவன் பதிவு செய்தார். சம்பவம் நடந்த இடம் 1 ஆம் எதிரிக்கு பாத்தியப்பட்டது தான் என்று அ.சா.3 புகார் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளாரா என்றால் சாட்சிகள் வாய்மொழியாக அ.சா.1க்கு

சொந்தமானது என்று சொன்னார்கள். சம்பவ நாளான 29.08.2018 1 மற்றும் 2 ஆம் எதிரியை அ.சா.1 முதல் 4 வரை கொலை மிரட்டல் விடுத்து தாக்கியதாக என்னிடம் வந்து புகார் அளித்தார்களா என்றால் இல்லை. குற்றஅறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை ஆனால் குற்ற அறிக்கை பதிவெண் 965/2018 என்று பதிவு செயப்பட்டுள்ளதா என்றால் அந்த குற்றத்திற்கான வழக்கு கோப்பு என்னிடம் சமர்பிக்கபடவில்லை.

6)வழக்கும் எதிர் வழக்கும் ஒன்றாக பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்படவேண்டும் என்றால் வழக்கு கோப்பில் உண்மையிருந்திருந்தால் அந்த வழக்கிலும் அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் சமர்பித்திருப்போம் அந்த வழக்கானது விசாரணைக்குபின் முடிக்கப்பட்ட வழக்காக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படும். இந்த வழக்கு தவறுதலாகவோ ஒரு தலைபட்சமாகவோ இந்த வழக்கை தாக்கல் செய்து புலன் விசாரணை மேற்கொண்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.01.28 18:55:02 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.